கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலைகலாசார பீடம்

நான்காம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
2011/2012 (SEP/OCTOBER 2014)

PHYS-**4204-** அறிகை மெய்யியல்

**(Cognitive Philosophy )**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து ஏதேனும் மூன்று வினாக்களுக்கும், பகுதி II இல் இருந்து ஏதேனும் ஒரு வினாவிற்குமாக மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக

---

பகுதி-I

01.

அ) அறிகை மெய்யியலின் இயல்பினையும் பரப்பினையும் வரலாற்று ரீதியாக ஆராய்க.

(10புள்ளிகள்)

ஆ) அறிகை மெய்யியல் தொடர்பாக எழுப்பப்படும் வினாக்களைக் குறிப்பிட்டு அதன் மீதான விமர்சனங்களை மதிப்பிடுக?

(15புள்ளிகள்)

02.

அ) சொம்ஸ்கியின் வாக்கிய உருவாக்க விபரிப்பு இலக்கணத்தின் கட்டமைப்புக் கூறுகளை எடுத்துக் கூறி பரிமாற்ற இலக்கணத்தின் முக்கியத்துவத்தை ஆராய்க.

(15புள்ளிகள்)

ஆ) "மொழியாற்றல் என்பது ஒருவரின் உள்ளார்ந்த திறமையுடன் சம்பந்தப்பட்டது" என்ற சொம்ஸ்கியின் கருத்தை விமர்சன ரீதியாக ஆராய்க.

(10புள்ளிகள்)

03.

அ) உணவுத் தேடல் நடவடிக்கைகள் எவ்வகையில் விஞ்ஞான ரீதியான வளர்ச்சியில் முக்கியத்துவம் பெறுகின்றது என்பதை மனித இன வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(9புள்ளிகள்)

ஆ) நியாந்தர்தால்ஸின் (Neanderthals) மனித இனம், ஆதிகால மனித இனத்துடன் (Early Humans) ஒப்பிடும் போது எவ்வகையில் விஞ்ஞான ரீதியான பண்புகளில் இருந்து வேறுபடுகின்றனர் என்பதை எடுத்துக் காட்டுக.

(8புள்ளிகள்)

இ) ஹோமோ சேபியன்ஸின் (Homo Sapiens)சிறப்பம்சங்களை ஆராய்க.

(8புள்ளிகள்)

04. பின்வருவனவற்றை விளக்குக.

அ) நடத்தை வாதமும் அதன் குறைபாடுகளும்.

(9புள்ளிகள்)

ஆ) விஞ்ஞானத்தில் காரண – காரிய சிந்தனை.

(8புள்ளிகள்)

இ) தன்னுணர்வு நிலை சார் மெய்ப்பொருளியல் பிரச்சினைகள்.

(8புள்ளிகள்)

## பகுதி –II

05. அறிவு வளர்ச்சியில் சார்பு வாதத்தின் பங்களிப்பினை விமர்சன ரீதியாக ஆராய்க.

(25புள்ளிகள்)

06. அறிகை மெய்யியலில் ஐயவாதம் (Skepticism) பெறும் இடத்தினை மதிப்பிடுக.

(25புள்ளிகள்)